**பெல்மதுள்ள பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 13 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெல்மதுள்ள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது முற்பணமாகக் கிடைத்த ஆதனவரி ரூபா 102,464 தொகை ஆதனவரிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆதனவரி வருமானம் ரூபா 204,928 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2018 ஆம் ஆண்டிற்காக முற்பணமாக கிடைத்த ரூபா 149,767 தொகையான ஆதனவரி முற்பணமாக கிடைத்த வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டில் ஆதனவரிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக வருமானம் ரூபா 299,534 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் கணக்கில் சீராக்கப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 168,278 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் சரியாக இனங்காணப்படாதிருந்ததுடன், முறையே ரூபா 9,000,000 தொகை மற்றும் ரூபா 1,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 50 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2017 யூன் 09 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடம் மற்றும் வாரந்த சந்தை என்பன மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொதுக் களஞ்சிய இருப்பு மற்றும் களஞ்சிய முற்கலவைக் கணக்குகளில் ரூபா 480,930 தொகையான மீதியொன்று காணப்பட்ட போதிலும், பொதீக ரீதியில்

அவ்வாறான ஒரு மீதி காணப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) சபைக்குச் சொந்தமான 12 கட்டிடங்களின் கிரளம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

06 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 15,483,972 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2013 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 385,350 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதிசேர்வரி மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 78,050,759 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 204 ஆம் விதி | - | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருட் மெய்மையாய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 32,930 | 2014 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட உபகட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 | - | சபைக்குரிய வாகனங்களின் சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி IV (ஆ) பகுதியின் 5(5) ஆவது உப விதி | - | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் இனங்காணப்பட்டிருந்த அனுமதியற்ற 27 நிர்மாணங்களை அகற்றுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எவ்வித பதிலும் கிடைத்திருக்காத 23 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,131,585 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,357,734 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,605,752 | 6,648,612 | 6,781,723 | 8,860,800 | 5,827,686 | 7,374,539 | 7,183,593 | 9,269,317 |
| வாடகை | 2,078,640 | 1,855,444 | 2,071,623 | 1,402,993 | 2,876,100 | 1,859,880 | 2,803,700 | 1,619,272 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 464,000 | 763,880 | 737,130 | - | 386,000 | 642,685 | 628,705 | 13,980 |
| ஏனைய வருமானம் | 13,172,000 | 14,175,199 | 8,901,345 | 23,273,718 | 13,097,000 | 13,978,843 | 8,052,678 | 18,019,898 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 03 சதவீதம், 59 சதவீதம், 31 சதவீதம், மற்றும் 122 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய

வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 69 சதவீதம் மற்றும் 40 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

**2.2.3 ஆதனவரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி மீதி ரூபா 8,395,715 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற 785 ஆதனவரி அலகுகளுக்குரிய ரூபா 4,001,337 கூட்டுத்தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. நிலுவை வரியை அறவிடல் தொடர்பாக சபையின் செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

2.2.4 **அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன்கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாத கைத்தொழில்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அனுமதிப்பத்திரம் பெறாத கைத்தொழில்களை இனங்காண்பதற்கு சபையினால் முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய 130 நிறுவனங்கள் அந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக ரூபா 572,000 வருமானமொன்றை சபை இழந்திருந்ததுடன் உரிய வியாபாரத்தை நடாத்திச் செல்லும் போது ஏற்படக் கூடிய சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீடொன்று இடம்பெறாமையின் காரணமாக சபை அதிகாரப்பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு சபையின் பொறுப்பு போதியளாவான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சந்தை அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 19 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(இ) வியாபார அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய கைத்தொழில்கள் மற்றும் 259 வியாபாரங்களுக்கு மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டடிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் வரையிலும் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 54 ஆக மாத்திரமே இருந்தது.

(ஈ) சபை அதிகாரப்பிரதேசத்தில் கைத்தொழில் வரி, விற்பனை வரி, வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 மார்ச் மாதம் முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்குரிய பெல்மதுள்ள மாவட்ட நீதிமன்றத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1274208 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் 2018 ஏப்ரல் வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் 2017

மே முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்திலிருந்து அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஏப்ரல் முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்ககை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயான நிலங்களின் காணியின் உரித்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்டதுடன் ஆணைக்குழுவின் சட்ட விதிகளின் பிரகாரம் அந்தக் காணியை இலவசமாக சபைக்கு கையளிக்க முடியாதிருந்ததாக 2017 மே 16 ஆந் திகதிய ED/LRC ஆம் இலக்க கடிதம் மூலம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அறிவித்திருந்தது. எனினும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் இடுகாடு கட்டளைச் சட்டத்தின் கீழும் மயான நிலங்கள் தொடர்பாக சரியான அதிகாரத்தரப்பு பிரதேச சபை ஆனமையால் அந்தக் காணியை கையேற்றுத் தருமாறு சபை கோரியிருந்த போதிலும் 2018 மார்ச் வரையிலும் அந்தப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1993 ஆம் ஆண்டின் போது நிதி, திட்டமிடல் அமைச்சிலிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த எனினும் உரித்து முறையாக கையேற்கப்படாத கெப் வண்டியொன்று ஓடக்கூடிய நிலமையில் இல்லாமையின் காரணமாக சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. கெப் வண்டியின் உரித்து தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வண்டியினைப் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 07 உழவு இயந்திரங்களில் 05 உழவு இயந்திரங்கள் 02 மாதம் மதல் 08 மாதங்கள் வரையிலான காலம் ஓட்டத்தில் ஈடுபடாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 613,004 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 05 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 4,660,500 மொத்த நிதிஏற்பாட்டில் 83 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சபை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | (ii) வருமானங்கள் அதிகரித்து பதிவு செய்யப்பட்டமை |
| | (iii) பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்து பயன்பாடு | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |